மாலை மலர் (06/10/2022)

### இந்தியாவிலேயே

# தமிழ்நாடு 2-வது பெரிய பொருளாதார மையமாக திகழ்கிறது

## செக்குடியரசு நாடு கண்காட்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேச்சு

சென்னை, அக்.6—

குறு—சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவ னங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அரசு முறை பயணமாக செக்குடியரசு நாட்டில் நடைபெறும் எம்.எஸ்.வி. கண் காட்சியில் பங்கேற்றார். கண்காட்சியில் அவர் பேசியதாவது:—

இந்தியாவிற்கும், செக்குடியரசிற்கும் இடையி லான பொருளாதார உறவு கள் 100 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளன. மேலும் இரு நாடுகளும் நமது உறவு களில் வலிமையையும் வளர்ச்சி யையும் அதிகரித்து வருகின்றன. இந்தியாவி லேயே 2—வது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு திகழ்கி றது.



செக்குடியரசு நாட்டில் நடைபெற்ற சர்வதேச கண்காட்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்றார்.

அதிகமான தொழிற்சாலைகள் உள்ள இந்தியா வில் 2.5 மில்லியனுக்கும் அதிகமான தொழிலா ளர்கள் உள்ளனர். இந்தியா விலேயே ஏற்றுமதி மற்றும் வணிகம் செய்வதில் தமிழ்நாடு 3வது இடத்தில் உள்ளது.

தமிழ்நாட்டில் 6 விமான நிலையங்கள், 4 பெரிய துறை முகங்கள், நன்கு இணைக்கப்பட்ட சாலைகள் மற்றும் ரெயில் பாதைகள் உள்ளன.

தமிழ்நாட்டில் ஆட்டோமொபைல், டெக்ஸ்டைல்ஸ், லெதர், ஏரோ—ஸ்பேஸ், டிஃபென்ஸ், பார்மா போன்ற துறைகளில் மில்லியனுக்கும் அதிகமான எம்.எஸ்.எம்.இ.கள் உள்ளன. தமிழ்நாடு அரசு தொழில் முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து ஆதரவையும் வழங்குகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.



செக்குடியரசு நாட்டிற்கு சென்றுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அந்நாட்டின் துணை அமைச்சர் பீட்டர் ஓகோவை சந்தித்து முதலீடுகள் ஈர்ப்பது குறித்த ஆலோசனை கூட்டத்தில் நினைவு பரிசு வழங்கினார்.